


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.5.2025) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக்குழுவின் துணைத்தலைவரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் மற்றும் செயல் துணைத்தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் ஆகியோர் சந்தித்து, மாநில திட்டக்குழுவினால் தயாரிக்கப்பட்ட கற்றலில் இருக்கும் இடைவெளிகளைக் கண்டறிவது மற்றும் மாநில அளவிலான அடைவு ஆய்வு அறிக்கையை (State Level Achievement Survey) வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திரமோகன், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்ட இயக்குநர் மரு. எம். ஆர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.



அரசு பொறுப்பேற்று நான்காண்டுகள் செய்த சாதனைகளுக்காகவும், ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டியும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (10.5.2025) முகாம் அலுவலகத்தில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.5.2025) முகாம் அலுவலகத்தில், முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் செ.காந்திசெல்வன் அவர்கள் சந்தித்து, அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகன் டாக்டர் கௌதம் காந்திசெல்வன் – டாக்டர் அபிநந்தனா சகாதேவன் மற்றும் அவரது குடும்பத்தினருடன் வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.5.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 5,650 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/ வீதம் மானியத் தொகை வழங்கிடும் அடையாளமாக, 10 பயனாளிகளுக்கு ஹஜ் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ப. அப்துல் சமது, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் சா. விஜயராஜ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

